
கசடதபற

ஒரு வல்லின மாத ஏடு

ஆசிரியர்: நா. கிருஷ்ணமூர்த்தி



16 1 தேவடி தெரு சென்னை 4 ஜனவரி 1972 30 காசு

கசடதபற

(1) பி. எஸ். ராமையா

சா. கந்தசாமி

தமிழில் சிறுகதைகள் — கட்டுரையை 'மங்கையர்க்கரசியின் காதல்' எழுதியவ.வே.சு ஐயரிலிருந்து எழுதலாம். குறுந்தொகையிலிருந்து எழுதலாம். புதுமைப் பித்தனிலிருந்து எழுதலாம். செத்துப் போனவர்களைப் பற்றி மட்டும் எழுதலாம். செத்துப் போனவர்கள் என்றால் புதுமைப்பித்தன், கு. ப. ராஜ கோபாலன், கு. அழகிரிசாமி பற்றித்தான எழுதமுடியும். சில விமர்சகர்களுக்கு அது போதும். எனக்குப் போதாது. நான் பல்கலைக் கழகத்தில் நினைவுச் சொற்பொழிவு ஏதும் நிகழ்த்தவில்லை; சாகித்ய அகாடமிக்குக் கட்டுரை ஏதும் எழுதவில்லை. ஆகையால் உயிரோடு இருக்கிறவர்களைப்பற்றி எழுதுவதில் சங்கடம் ஏதுமில்லை.

தமிழில் ஏராளமானவர்கள் சிறுகதைகள் எழுதி இருக்கிறார்கள்; எழுதிக்கொண்டு வருகிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் சில ஆண்டுகளுக்கு இரண்டொரு எழுத்தாளர்களுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து பிரமாதப் படுத்துகின்றன. கொஞ்சநாட்களுக்குப் பிறகு வேறு சிலரை மேலே ஏற்றி வைக்கின்றன, சௌகரியத்திற்கு ஏற்றாற் போல. இப்படிப் பத்திரிகைகளின் உதவியால் விளம்பரமான பல எழுத்தாளர்களுக்கு இலக்கிய ரீதியில் அந்தஸ்து ஏதுமில்லாவிட்டாலும் இலக்கிய ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டு இருக்கிறார்கள். இதனால்தான் தமிழ்ச் சிறுகதைச் சரித்திரத்தை எழுதும் சோமலெ தொ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, அ. ச. ஞானசம்பந்தம்தொடங்கி டாக்டர். சாலைஇளந்திரையன் வரை—ராஜாஜி, புதுமைப்பித்தன், சுகிசுப்பிரமணியம், கு. ப. ராஜகோபாலன், எல்லார்வி... என்று எழுதிக் கொண்டு போகிறார்கள். உழைப்பும், இலக்கியத்தைக் கண்டு சொல்லும் திறனும்—கண்டதைச் சொல்லும் சக்தியும் இல்லாதபோது—ஏற்கனவே சொல்லப் பட்டிருப்பதை அப்படியே திரும்பச் சொல்வது மரபாகிவிடுகிறது; ஏற்றுக் கொள்வதும் மரபாகிவிடுகிறது.

ஒவ்வொரு தலைமுறையும்—முந்திய தலைமுறைகளின் எழுத்தையும்—தன் தலைமுறையின் எழுத்தையும் விமர்சித்துப் பார்ப்பது இலக்கியத்திற்கு மிகவும் பயனுள்ள ஒரு காரியம். எல்லோருக்கும் அது திருப்தி அளிக்காவிட்டாலுங் கூட இலக்கியம் பற்றி சர்ச்சை செய்து பார்க்க ஒரு வாய்ப்பாக அமையும்.

ஆரம்பகால முயற்சிகள்—தமிழில் முதன் முதலாக எழுதப்பட்ட சிறுகதைகள் என்ற அனுதாபத்தோடு அந்தக் கால கதைகளைப் பார்க்க வேண்டும் என்றொரு கருத்து அடிக்கடி சொல்லப்படுகிறது. இது இலக்கியத்திற்குப் புறம்பான வாதமே எனலாம். தொடக்கம் என்பதற்காகவே மட்டும் எதற்கும் தனிச் சிறப்பு ஏதுமில்லை. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு முதல் நாவல் என்பதால் மட்டுமே சிறப்பு இல்லை முதல் நாவல் என்பதற்கு மேலே இலக்கிய பூர்வமான அம்சமும் இருக்கிறது என்பதாலேயே சிறப்புப் பெறுகிறது.

ஒவ்வொரு காலத்திலும் இலக்கிய ஆசிரியனின் மேதாவிலாசத்திறகும், திறமைக்கும், உழைப்புக்கும் ஏற்ற வகையில் படைப்பு அமைகிறது. காலத்தின் கோடுகள் மொழி மீதும் கருத்துக்கள் மீதும் விழுந்தாலுங்கூட படியாமலே அகன்று விடுகின்றன. சில அனுஷ்டானங்களும்—நிகழ்ச்சிகளும் இன்றைய வாழ்க்கை முறைக்கு ஒவ்வாதவகையில் இருந்தாலுங்கூட — இலக்கிய அந்தஸ்தை இழப்பதில்லை என்பதுதான் முக்கியமானது.

பி. எஸ். ராமையா தமிழில் ரொம்ப நாட்களாக - அதாவது ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து மூன்றிலிருந்து எழுதிக் கொண்டு வருகிறார். முதல் கதை ஆனந்த விகடனில் வெளியாகியது என்று நினைக்கிறேன்—ஒரு சிறுகதைப் போட்டி மூலமாக. கதை 'மலரும் மணமும்'. பிறகு இவரின் கதைகள் மணிக்கொடியில் நிறைய வெளியாயின. இப்போது குமுதத்தில் பிரசுரமாகின்றன. இவரோடு எழுத ஆரம்பித்தவர்களில் பலரும் சார்ந்து எழுதுவதை விட்டு ஒதுங்கி விட்டார்கள். இவரோ சிறுகதை, நாவல், நாடகம் என்று பல துறைகளிலும் எழுதிவருகிறார்.

ஆயிரத்துத்தொளாயிரத்துமுப்பத்துமூன்றில் எழுதியது மாதிரியே சம்பவங்களைக் கோத்துக் கதையாக்குகிறார். இவர் கதைகளில் சம்பவங்கள் மேலே மேலே என்று எழும்பி சரியும். ஒன்றைவிட இன்னொன்று அதிக சுவாரசியமாகக், கிளர்ச்சியூட்டக்கூடியதாகப், படிக்கத் தூண்டுவதாக அமையும். இதனால் இவர் கதைகளுக்கு ஓர் உருவம் இல்லாமல் போய்விடுகிறது. ஒரு கதையிலிருந்து இரண்டு சம்பவங்களை நீக்கி விட்டாலுங்கூட,

தொடர்ச்சி போகாது—கதை சிதைவு அடையாது. க. நா. சுப்பிரமணியம் சொன்னது போல் இவர் கதைகள் பலவும் நாவலின் சுருக்கமாகவே இருக்கின்றன. சுவாரசியமான சம்பவங்களின் தொகுப்பாகக் கதைகளை அமைப்பதால் இது தவிர்க்கமுடியாத அம்சமாகிவிடுகிறது. இவர்கதைகளைச் சுலபமாக நாவலாக்கலாம், நாடகமாக்கலாம், சினிமாவாககலாம். சிதைக்கமுடியாத உருவம் என்பதும், மாற்றமுடியாத கதையமைப்பு என்பதும் இவர் கதைகளில் காண முடியாத அம்சம். கு ப ராஜகோபாலன் மாதிரி ஒரு சம்பவத்தை முழுமையாக ஒரே நோக்கில் பல அர்த்தங்கள் தூக்கலாகத் தெரியச்சொல்பவர் அல்லர் பி.எஸ் ராமையா. இதற்கு மலரும் மணமும், வார்ப்படம், வளையல் துண்டு, யானைக்கல், நினைவு முகம மறக்கவில்லை, கானல் நீர், கார்னிவல், குஞ்சிதபாதம், அமிஞ்சிக்கரை சோமு, நல்லஎடுத்துக் காட்டுக்கள். இவர் மரபு வ. வே சு. ஐயர் மரபு. மங்கையர்கரசியின் காதல் மரபு வாசகர்களின் அனுதாபத்தையும் கண்ணீரையும் கொண்டுவரவேண்டும்என்பதற்காகச்சம்பவங்களை அடுக்கி, திடீரென்று சரிப்பது. துக்கத்திலும், விரக்தியிலும் அடங்குவது. இந்த மரபுக்குக் கதைதான முக்கியம். சம்பவங்கள் தான் பிரதானம். இந்த மரபை சிருஷ்டித்தவர் வ. வே. சு ஐயர் என்ருல், பலப்படுத்தியவர் பி. எஸ் ராமையா. சம்பவங்களைக் கோக்கவும். சிதைக்கவும் இவருக்கு ரொம்பவும் கை வந்திருக்கிறது.

ஒரு கதை. நினைவு முகம் மறக்கவில்லை.

ஜனகம் இளம் பெண். விதவை. அண்ணன் வீட்டில் இருந்து வருகிருள். அந்த வீட்டிற்குச் சேதுராமன அடிக்கடி வருகிருன். அவன், அவள் அண்ணனின் நண்பன். அவனேடு வேலை செய்கிறவன். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவன். உறவு மாதிரி பழகுகிறவன்.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஜனகம் வீட்டு வாசலில் ஒரு பிச்சைக்காரி கத்திக் கொண்டு இருக்கிருள்.

'அவளுக்கு என்ன வேண்டும்?' வந்த சேதுராமன் ஜனகத்திடம் கேட்கிருன்.

ஜனகம் அவனுக்குப் பதில் சொல்வதற்கு முன் பிச்சைக்காரி அவன் புறம் பார்த்துக் கொண்டே, ''தரும ராசாத்தி! நீ தொட்டதெல்லாம் பொன்னுகும் ஒன் தங்கக்கையாலே ஒரு கிழிஞ்ச பொடவை கொடு தாயே. ஒன் சொன்னபடியெல்லாம் கேட்டு நடக்கற புருசனுக்கு நீ வாக்கைப் படப்போறே. ராசா மாதிரி ஒரு புள்ள பொறக்கப் போகுது உனக்கு'' என்ருள்.

இதைக் கேட்ட பிறகு, இதுவரையில் அவன் மனத்தில் அரும்பாத காதல் உணர்ச்சி தோன்றுகிறது. அவனுக்கும் அப்படியே. இருவரும் தவிப்பு உறுகிருர்கள். அவன், அவள் அண்ணனிடம் தன் ஆசையை வெளியிடுகிருன். அவர், இரண்டொரு இடங்களில் இருந்து வந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிரு.

கதை முடிந்ததா?

துக்கத்திலும், நிராசையிலும் முடிவுறும் பி. எஸ். ராமையாவின் கதை இனிமேல்தான் தொடர்கிறது.

கல்யாணம் முடிந்தது. அவனுக்கு ஒரு மாதம் லீவு. பெங்களூருக்குப் புறப்படுகிருர்கள். தனிமையான இரண்டாம் வகுப்பு ரயில்பெட்டி. தான் விரும்பிய சொர்க்கத்தையே அடைந்து விட்டவன் போன்ற திருப்தியுடனும் குதூகலத்துடனும் 'ஜனகம்' என்று அழைத்தபடியே அவள் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் சாய்ந்தான். ஆனல், அடுத்த விஞடி ஜனகம் உடல் குன்றிக கூச்சத்துடன் ஒதுங்குவதைக் கண்டவுடன் திடுக்கிட்டவனய், ''என்ன ஜனகம்! ஏன் ஒரு மாதிரியாகயிருக்கிருய்'' என்று கேட்டான்.

அவள் கண்ணீருக்கும் விம்மலுக்கும் இடையே ஒரு கதையைச் சொல்கிருள். அதாவது, அவள் மன்னி ஜன்னலுக்குப் பின்ஞல் நின்று கொண்டு சிரித்தபடி போய்வா என்று விடை கொடுத்தது, முதல் கணவனுக்குத் தான் இப்படி விடை கொடுத்ததை நினைவுக்குக் கொண்டு வந்து விட்டது. அவ்வளவுதான். அவளால் தாள முடியவில்லை. குழம்பிப் போய்த் தவிக்கிருள்.

ஒரு சம்பவத்திலிருந்து இன்னொரு சம்பவத்திற்குச் செல்வதுதான் பி. எஸ். ராமையாவின் தத்துவம். அதனை ஒரு தத்துவ நோக்கோடு மனேதத்துவ நோக்கோடு கண்டோ—நிஜவாழ்க்கையாகக் காண்பதல்ல—சாத்தியமா, சாத்தியமில்லையா என்கிற புத்தி பூர்வமான ஆராய்ச்சியுமல்ல. மொழி கையாளுவதில் கூட இவருக்கு ஒரு திட்டமான நோக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஜனகத்தின் கதையைக் கேட்ட சேதுராமன் சொர்க்கத்தையே அடைந்து விட்டதாக எண்ணிக் குதூகலமுற்ற சேதுராமன், ''என்னைப் பற்றி கவலைப் படாதே' என்று எதிர்ப்புறத்திலிருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

ஜனகம் அவன் கண்களைச் சந்திக்க விரும்பாதவள் போல முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பி வெளியே பார்த்தாள். அவள் அழுது கொண்டிருப்பதை அவள் உடல் குலுங்கி அறிவித்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த சேதுராமன் மனத்தில் தானாகவே அந்தப் பிச்சைக்காரிச் சம்பவக் காட்சி எழுந்து நடந்தது.

இந்தக் கதையில், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை பார்ப்பதை விட்டு விட்டு, சொல்லப்பட்டிருப்பது, திருப்திகரமாக இருக்கிறதா என்று பார்க்கையில் கூட ஏமாற்றமே ஏற்படுகிறது.

பிச்சைக்காரியின் வார்த்தையிலிருந்து, கதையைத் தொடங்கி, அவள் வார்த்தைக்கு ஏதோ அர்த்தம் இருக்கிறது என்ற நினைப்போடு கதையை முடித்து இருக்கிறார் ஆசிரியர். இந்த முடிச்சுக்கு அர்த்தம் ஏதுமில்லை என்பது கதையைப் படிக்கையில் தெரிகிறது. இம்மாதிரிக் கதைகளை நான்கு பக்கத்திலும், நாற்பது பக்கத்திலும், நானூறு பக்கத்திலும் எழுதலாம். சம்பவங்களைக் கூட்டிக்கொண்டே போய், திடீரென்று எதிர்பாராத ஒருமுடிவுக்கு கதையைத் திருப்பிவிடுவதுதான் இதன இலட்சியம். இதனை, தன்னளவில்சிறப்பாகச் செய்து இருக்கிறார் பி. எஸ். ராமையா.

இன்னொரு கதை.

குஞ்சிதபாதம்ஒரு "சுயமரியாதை"காரன். நூற்றுக் கணக்கான மேடைகளில் ஏறி, ஆயிரக்கணக்கான ஜனங்கள் முன்பு பேசியவன், மனம் மாறி, ஆஸ்திகனாகப் போகும் கதை. இதனையும், வழக்கமபோல் பி. எஸ். ராமையா சம்பவங்களை எதிர் எதிராக அமைத்து, கதையை நகர்த்துகிறார். ஆனால், அறிவு பூர்வமான பிரச்சனையை சம்பவங்கள் தாள முடியாமல் சோர்ந்து விடுகின்றன. இல்லாவிட்டால், பலவீனமான சம்பவத்தின் மீது, புத்திபூர்வமாக ஆராயவேண்டிய விஷயத்தை ஏற்றி வைத்திருக்கிறார். எப்படிச் சொன்னாலும் சரிதான். ஆனால் கதை திரண்டு வரவில்லை. அதற்கு ஓர் அமைப்பும் கிடைக்கவில்லை- இம்மாதிரியான கதைகளில்ஆசிரியர் குரல் எவ்வளவிற்கு அடங்கி இருக்கிறதோ அவ்வளவுதான் கதைக்கு வலு கிடைக்கும் என்பார்கள். குஞ்சிதபாதத்திலே, அவனை ஆஸ்திகனுக்கும் வேகமும், மனமாற்றத்தைச் சொல்லும் போக்குந்தான் ஆசிரியருக்கு அவசியமாகப்பட்டு இருக்கிறது. தான் விரும்பியதை, நினைத்ததை கதை என்கிற நோக்கில் சொல்லி இருக்கிறார்.

ஒரு பிரசாரமாக, ஆஸ்திக பிரசுரமாக் மட்டுமே காட்சி தருகிறது. கருணாநிதி, ஆசைத்தம்பி போன்றவர்கள் எழுதிய கதைகளுக்கு ஒருவேளை எதிர் பிரசாரமாக குஞ்சிதபாதம் எழுதப்பட்டு இருக்கலாம். அவர்கள் கதைகளுக்கு எப்படி இலக்கிய மதிப்பு கிடையாதோ அதே மாதிரிதான் குஞ்சிதபாதத்திற்கும் இல கிய மதிப்பு ஏதும் கிடையாது. ஆனால், ஒவ்வொரு தலைமுறையிலும் இம்மாதிரியான பிரச்சனைகள் எழுதப்பட்டு, படிக்கப்பட்டு, இலக்கியம் என்றும் மதிப்பிடப் பட்டும் வருகிறது.

சங்கீதத்துடன், செல்வத்துடன் பெரிய வீட்டில் இருக்கும் தாசி — எட்டணாவுக்கு ரோட்டில் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் இன்னொருத்தி, இரண்டு இழைகளாக சொல்லப்படும் கதை கார்னிவல். தன்னுடைய மிகச் சிறந்த கண்களில் இதுவும் ஒன்று என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார் பி. எஸ். ராமையா. விஷயம் தீவிரமாக இருந்தாலும்—வழக்கத்திற்கு மீறிய அடக்கத்துடன் சம்பவங்கள் இணைக்கப்பட்டு இருப்பதை மிகவும் விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். வனஜாக்ஷி என்னும் பணக்கார தாசியின் பார்வையில் சொல்லப்படும் கதை—ஒருநாளில் ஏராளமான அனுபவங்களைத் தந்து விடும் கதை பி. எஸ். ராமையாவின் கார்னிவல், அவர் கதைகளில் குறிப்பிடத்தக்கது தான்.

பி. எஸ். ராமையா ஒரே மாதிரியான கதையைத்தான் எப்போதும் எழுதிக்கொண்டு வருகிறார். ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து மூன்றில் எழுதியது போலவே, ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து ஒன்றிலும் எழுதுகிறார். பேர்களும் சூழ்நிலையும் மாறலாம். சம்பவங்கள் முன்னும் பின்னுமாக நகரலாம். ஆனால் அடிப்படை மாறுவதில்லை.

பி. எஸ். ராமையாவின் வெகுசமீப காலக் கதை. 'எப்போதுமே தொடக்கூடாதா?'

இது ஆசிரியரின் வழக்கமான துக்கத்திலும் நிராசையிலும் முடியும் ஒரு காதல் கதை. சாவுதான் இதன பிரதான அம்சம்; ஊதாரித் தனம் இன்னொரு அம்சம். இரண்டு இழைகளையும் கொண்டு கதையை உருவாக்கி இருக்கிறார் ஆசிரியர்.

காஞ்சனா தாய் இல்லாத பெண்—தந்தையும் கூட? அண்ணன ஆதரவில் வளர்கிறாள். அவள் அண்ணன் ஆடிட் ஆபீஸ் வைத்து நடத்துகிறான். அங்கே துணை ஆடிட்டராகப்

(13-ம் பக்கம் பார்க்க)

வெளியே ஒருவன்

நா. ஜெயராமன்

அவன் தலை தெரிந்ததுமே பால்கனிலும், வாசற்புறத்தாழ்வாரத்திலும் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் கூச்சல் போட்டு ஒருவர் மேல் ஒருவர் இடறிக் கொண்டு ஓடி வந்தார்கள். கொஞ்சம் பெரியவன்கள் இரண்டுபேரும் ஆளுக்கு ஒருகையைப்பிடித்து இழுத்தார்கள். சிறுமிகள் இருவர் காலைக் கட்டிக் கொண்டனர். வேறு ஒருவன் சட்டையைப் பிடித்து இழுத்தான். மேல்பித்தான் பட்டென்று தெறித்து சட்டை வலது தோள் பட்டை பக்கமாக நழுவியது.

"எலே விடுங்கடா!"

"ஒன்னை விட மாட்டோம் சும்மா ஏமாத்கிட்டே இருக்கே. இன்னிக்குக் கூட்டிகிட்டு போகணும்."

"எங்கேடா?"

"தெரியாது மாதிரி கேட்கறையா?"—பெரியவன் ஒருவன் முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டு இடுப்பில் விரல்களால் அடித்தான்.

"எப்ப நீ ஜூவுக்குக்கூட்டிகிட்டுபோவே" சிறுமிகளில் ஒருத்தி கேட்டாள்.

"ஓ! அதுவா? நாளைக்குக் கண்டிப்பா அழைச்சுகிட்டு போறேன்."

"ஒண்ணும் வேண்டாம் போ. இன்னிக்கே கூட்டிகிட்டு போ. தினம் இது மாதிரி சொல்லிண்டே இருக்கே."—பெரியவன் திரும்பவும் சினந்துகொண்டு முணு முணுத்தான்.

"ஜூவுக்குக் கூட்டிண்டுபோ!"—எல்லாரும் ஏகக்குரலில் கத்தினார்கள். ஒரு சின்ன குரல் தனித்துக் கேட்டது. அவன் எல்லாரையும் விலக்கினான். அவன் அண்ணனின் மூத்த பெண் இரண்டு வயது குழந்தை அவனுக்குப் பின்புறத்தில் வேஷ்டியை இழுத்துக்கொணடு நின்றாள்.

"அடே! குட்டி நீயும் இருக்கியா?"

"ஆமா, நானுந்தான் இருக்கேன்"—அது சிரித்தது. அவளைத் தூக்கிக்கொணடுநடக்க ஆரம்பிததான்.

"நாளைக்குக் கண்டிப்பாக கூட்டி கிட்டு போவியா?"—பெரியவன திரும்பவும் கேட்டான்.

"கட்டாயம் கூட்டிகிட்டு போறேன்".

அவன் விலகிக் கொண்டான். எங்கேயோ ஓட ஆரம்பித்தான். மற்றவர்களும் அவனைத் தொடர்ந்தார்கள்.

"எங்கேடா போறீங்க?"

"நாங்க இங்கே கீழே விளையாடப் போறோம்".

"வெய்யலா இருக்கேடா?"

"பரவாயில்லை போ. நீதான் ஜூவுக்குக் கூட்டிகிட்டுப் போக மாட்டேங்கிறியே?"

"அதான், சரின்னு சொன்னேனே!" அவர்கள் ஓடினார்கள். இவனுடைய இடுப்பிலிருந்த சிறுமி, "நானும் போறேன் போ" என்று நழுவினாள். அவளை இறக்கிவிட்டான். அவளும் அவர்களைத் தேடி ஓடினாள்.

மாடிப்படிகளில் ஏறியபோது அவனுக்கு வருத்தமாக இருந்தது. இந்த சின்ன காரியத்தைச் செய்யத் தனக்கு ஆயிரம் யோசனைகள் செய்ய வேண்டியுள்ள நிலைமையை எண்ணிப் பார்த்தான். தான் அடிக்கடி கவலைகளால் பலவீனப்பட்டுப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டான். இரண்டு நாட்களுக்கு முன்பு சாயந்திரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, அன்றைய சாயந்திரப்பொழுது மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பதாகத் தோன்றியது. அது அப்படி இருந்ததனல், யோசனைகளுக்கிடையில் அவனுக்கு ஒரு தெளிவும், உறுதியும் பிறந்தன இன்றையப் பொழுது மிக முக்கியம். இன்று பொறுப்புகளை ஒழுங்காகக் கவனித்து விட்டால் அது நாளைய பொழுதுக்கு நம்மை தானே தயார் செய்து விடுகிறது. எனவே கவலை ஏதும் படாமல் இந்த கணத்தில் என்ன தோன்றுகிறதோ அதைச் செயதால் போதும். நாளையைப் பற்றி அக்கறையில்லை. இந்த முடிவுக்கு வந்தபோது தனக்குஏதும்பிரச்னைகளே இல்லாதது போன்ற சுதந்திர உணர்வு பெற்றான. அப்பொழுது பஸ், பாலர் அரங்கம் ஸ்டாப்பில் நின்றது. இவனுக்குச் சட்டென்று குழந்தைகளின் ஞாபகம் வந்தது. தான் அவர்களை ஏமாற்றி கொண்டு இருக்கிறோம் என்ற குற்ற உணர்வு தலைதூக்கியது. சற்று முன்பு கிட்டிய அமைதியும், உறுதியும் சிதைந்தாற்போல இருந்தது.

கதவு ஒருக்களிக்கப் பட்டிருந்தது. மெலசாகத்திறந்துகொண்டு உள்ளே நுழைந்து திரும்பவும் பழையமாதிரி ஒருக்களித்தான். கூடம் கழுவி விடப்பட்டிருந்தது. அங்கங்கே ஈரம் காயாமல் திட்டுத் திட்டாக இருந்தது. இவனுக்குக் கூடத்தில் ஏதோ மாறி இருந்தாற் போல இருந்தது. தலையைமட்டும் ஒருக்களித்த கதவு வழியாக வெளியே நீட்டிப் பார்த்தான். பெஞ்சை வெளியே தூக்கிப் போட்டிருந்தார்கள். தான் சாவகாசமாக இங்கே வந்து உட்கார்ந்து அல்லது படுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தான். கூடத்தை ஒட்டியிருந்த அறைக்குள் நுழைந்தான் அண்ணன், பெரியம்மாவின்பிள்ளை, கட்டிலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். இவனுடைய தம்பி ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

"ஓங்களுக்கு உடனே பஸ்கிடைச்சுதா?" —தம்பியைப் பார்த்துக் கேட்டான்.

"பத்து நிமிஷம் காத்துண்டு இருந்திருப்போம்". இவன் குரலைக் கேட்டதும் பேப்பரிலிருந்து தலையை நிமிர்த்தி அண்ணன், "வா" என்ருன்.

"வேற எங்கேயாவது போயிட்டு வர்றியா?"

"பிரண்ட் வீட்டுக்குப் போயிட்டு வந்தேன்" என்றவன் தொடர்ந்து கேட்டான்.

"வாத்தியார் இன்னும் வரலியா?"

"ஒன்பதரை, பத்துக்குவர்ரேன்னுர். மத்த ரெண்டு பேரும வந்துட்டா. கீழே மாடிப்படி பக்கத்துலே இருந்தாளே, பார்க்கலே?"—குழந்தைகள் செய்த கலவரத்தில் இரண்டு பிராம்மணர்களை மாடிப்படிக் கீழ் பார்த்தது ஏதோ கனவில் நடந்த மாதிரி இருந்தது.

அண்ணன் உள்ளே காரியமாக இருந்த தன் தங்கையைக் கூப்பிட்டு இவனுக்குக் காப்பி கொடுக்கச் சொன்னுன். அவளும், இவன் தங்கையும் குழந்தைகளின் முன்பசியைத் தீர்க்க சாப்பாடு தயாரித்துக் கொண்டிருந்தார்கள். சின்னச்சின்ன தட்டும், இலையும் கலந்து வரிசையாகப் போடப் பட்டிருந்தன. இவன் சமையலறையை எட்டிப் பார்த்தான். அம்மாவும், ஒன்றுவிட்ட அக்காவும் ஈரப் புடவையுடன் காரியம் செய்து கொண்டிருந்தார்கள்.

"என்ன அம்மா, ரொம்ப பிஸியா?"

"எங்களுக்குப் பாதி காரியம் ஆகிவிட்டது."

"என்ன உன் பிள்ளை பாஸ் பண்ணினதுக்கு ஒண்ணும் கிடையாதா? அவனை எங்கே காணேம்?"

"ஒனக்கு இல்லாமலா? அவன் கடைக்குப் போயிருக்கான்".

"அடுத்தவனை எங்கே காணேம்?"

"அவனுக்கு ஏதாவது புஸ்தகம் கெடைச்சிருக்கும். கண்ணை இடுக்கிண்டு, தலையைக் கவிழ்த்துண்டு படிச்சிண்டிருப்பான். இன்னிக்குக் கல்கி வந்திருக்கும். எதிர் ஆத்துலே இருப்பான் பாரு".

இவன் உள்ளே போய்க் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். அட்டை கிழிந்து புழுதிப்பிசுக்கு ஏறிய வாரப் பததிரிகை ஒன்றை எடுத்து வைத்துப் புரட்டினுன். நாலைந்து பேப்பர்கள் கீழே சிதறின. இவன் அவைகளை யெடுத்துப் பக்கம் பார்த்து அடுக்கிஞன்.

"இந்த வாரத்தது அது. அந்த லட்சணத்துலே இருக்கு".—அண்ணன் சொன்ஞன்.

"குழந்தைகள் இருக்கிற இடத்துலே அப்படித்தான்," என்ருன் இவன்.

இவனுக்கு காப்பி வந்தது. ஒரு கையால் அதை ஆற்றிக் கொண்டே புஸ்தகத்திலும் கவனமாக இருந்தான்.

"பசங்கள் சாப்பிடவரலாம்."—அண்ணன் இவன் தம்பியை அனுப்பி அவர்களைக் கூட்டி வரச் சொன்ஞன். ஒரே இரைச்சலாக இருந்தது. குழந்தைகள் வந்தார்கள்.

"கையை அலம்பிண்டு சாப்பிட வாங்கடா."—அண்ணன் அதட்டுகிறமாதிரி சொன்ஞன். இவன் அண்ணனுடைய பெண்ணைப் பார்த்துக் கேட்டான்.

"அம்மா எங்கேடி?"

"அவாத்துலே இருக்கா. தீட்டு."

"பாப்பா எங்கே?"

"பாப்பா அந்தமாமியாத்துலே இருக்கா"

"நீ எப்ப வந்தே?"—அக்காவின் பெரிய பையன் கேட்டுக் கொண்டே வந்தான்.

"நீங்களும் சாப்பிடுங்கடா," அண்ணன் இவன் தம்பியையும் சேர்த்துச் சொன்ஞன். இவன் தம்பி, "எனக்கு வேண்டாம்," என்ருன்.

"நீ காப்பியாவது குடிச்சியா?"

"உம்"

பையன்கள் எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இவன் மட்டும் முரண்டு பண்ருன். என்ஞலே முடியலே."

"யாரு?" - அக்கா சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள். பெயரைச் சொன்ஞர்கள். இவன் அந்த அறையின் வாசற்படி கிட்டே நினறு பார்த்தான். ஒருத்தன் தட்டு காலியாக இருந்தது. பக்கத்தில் அப்பளாம் மட்டும் கிடந்தது. அவன் காலே நீட்டிக் கொண்டு தட்டை விட்டுத் தள்ளி உட்கார்ந்து இருந்தான்.

"என்னடா? உனக்கு இன்னிக்கு வெறி பிடிச்சிருக்கா?" – அக்கா அதட்டிக்கொண்டே வந்தாள். சுற்றும் முற்றும் கவனமாகப் பார்த்து எதன் மேலும் யார் மீதும் படாமல் நின்று, "என்ன வேணும் உனக்கு?" என்று கேட்டாள்.

அவன் முணு முணுக்கிறமாதிரி, "பருப்பு" என்ருன்.

"இப்ப குழம்புஞ் சாதம் சாப்பிடு. அப்புறமா பருப்பு, பாயசம் எலலாம் சாப்பிடலாம"

அவன், "மாட்டேன் போ," என்ருன். சாதம் போட வந்தவள் கையைத் தட்டிவிட்டான். அக்கா பல்லேக் கடித்துக் கொண்டு கீழே கிடந்த விசிறியை எடுத்துத் திருப்பி அதன் கட்டையால் அவன் தலேயில் அடித்தாள்.

"எக்கேடு கெட்டு போ' என்று சமையலறைக்குப் போனுள். இவனுக்குக் கஷ்டமாக இருந்தது. இவனே இவர்கள் மிகவும் கெடுத்து விட்டார்கள் என்று நினேத்தான். அவனுடைய பிடிவாதத்திற்கு இவர்கள்தான் காரணம என்று பட்டது.

முன்பு ஒரு முறை ட்யூஷன் வாத்தியாரிடம் போக மறுத்தவனே தாத்தா, அப்பா, அம்மா, ஒவ்வொருவராக மாற்றி மாற்றி அடித்தார்கள். இந்தக் கண்டிப்பு, அவன் வளர்ச்சியைப் பாதிக்கும் என்று எப்படி அவர்களிடம் சொல்வது என்று இவனுக்குப் புரியவில்லே.

"நீயும் சாப்பிடறையா?" –இவன் அண்ணனின் முத்த பெண்ணிடம் குனிந்து அவள் கன்னத்தில் தட்டினுன்.

"குழம்பு ஒனக்கு உறைக்கலே?"

"இல்லேயே! எனக்குப் பிடிக்குமே!"

"நீ சாப்பிட்டுவிட்டு எனக்குச் சாதம் போடறியா?"

"உம் சாயங்கலமா போடறேன்."

"சரி தான் போ."

இவன் திரும்பவும் கட்டிலில் வந்து உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்டினுன். சிறிது நேரத்திற்குப்பிறகு அந்த அறைப் பக்கம் எட்டிப் பார்த்தான். வீம்பு பண்ணியவன் மட்டும் விசும்பிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் தட்டைச் சுற்றி நிறைய பருக்கைகள் சிதறி இருந்தன. மூக்கு நுனிக்கு வந்தசளியை அவ்வப்பொழுது உள்ளே உறிஞ்சிக் கொண்டான்.

இவன் எழுந்து நின்று ஒரு முறை சோம்பல் முறித்து விட்டு வாசலுக்கு வந்து பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான். தொலேவிலிருந்த சாலேயையும், அங்கங்கே தெரிந்த வீடுகளேயும் பார்த்தான். எல்லாம் ஒரே மாதிரியான வீடுகள். வெளியில் அதிக நடமாட்டமில்லாதது வெய்யலின் உக்கிரத்தைக் காண்பித்தது. சட்டையில் மடிப்பு விழுந்து உடம்பு குளிர்ந்தபோது காற்றுக்குக் காரணமான வேப்ப மரத்தைப் பார்த்தான். அதில் பூக்கள் இல்லே. கீழே குனிந்து பார்த்தான். அங்கேயும் பூக்கள் சிதறிக் கிடக்கவில்லே. 'வைகாசி பாதி போய் விட்டது. பூ எப்படி இருக்கும்? என்று கேட்டுக் கொண்டான்.

"எண்ணே வாங்கி ஸ்நானம் பண்ணுங்கோ. மேலே நெறைய எடமிருக்கு. ஜம்னு வேஷ்டியைக் காயவச்சு கட்டிக்கலாம்."—வாத்தியார் சொல்லிக் கொண்டே படியேறினுர். அவர் பின்னுல் கீழே காத்திருந்த இருவரும் வந்தார்கள். வாத்தியார் குரலேக் கேட்டதும் அண்ணன் வெளியே எட்டிப் பார்த்தான்.

"நீயும் ஸ்நானம் பண்ணலாம்."

"கரெக்டா வந்துட்டேளே!"

"நான் டயத்தை மட்டும் தப்ப விடமாட்டேன்." வாத்தியார் இவனேப் பார்த்துச் சிரித்து விட்டு உள்ளே நுழைந்தார். கதவு சாத்தப் பட்டது.

"இங்கே பாரேன்!' – குரலேக் கேட்டதும் கீழே எட்டிப் பார்த்தான். அக்காவின் பெரிய பிள்ளே வாத்தியாரின் சைக்கிளின் ஸ்டாண்டை தூக்கி விட்டு நகர்த்திக் கொண்டிருந்தான்.

"ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வரப் போறேன்".

"எங்கே ரோடுக்கா?"

"ஆமாம்."

"வேண்டாண்டா."— இவனுக்கு சைக்கிள் விடத் தெரியாது. சாலேயில் பஸ்களுக்கும், கார்களுக்கும் இடையில அவன் சைக்கிளில் போவதைக் கற்பனே பண்ணிப் பார்த்த போது பயமாக இருந்தது. இவன பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் பெடலேத் துரிதமாக மிதித்துக் கொண்டு வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். இவன் தம்பி பக்கத்தில் வந்து நின்ருன்.

"என்னடா?"

"ஒண்ணுமில்லே." சைக்கிளில் வந்து இறங்கியவனைச் சுற்றிக் குழந்தைகள் நின்று கொண்டிருந்தனர். அவனுக்கு வியர்த்து இருந்தது.

"யார் என் பின்னலே வர்றீங்க?" என்று கேட்டான். எல்லாரும் ஏககாலத்தில் 'நான் நான்' என்றார்கள்.

"ஒவ்வொருத்தராதான். மொதல்லே சின்னவங்க".

முதலில் தன் மாமாவின் பெண்ணைத் தூக்கிக் காரியரில் வைத்துக் கொண்டான். தானும் ஏறிக்கொண்டு கிளம்பினன்.

"ரோடுக்குப் போகாதேடா!" என்றான் இவன்.

"இல்லே! இங்கே ஒவ்வொருத்தரையும் ஒரு ரவுண்ட்."—பின்னல் உட்கார்ந்திருந்த குழந்தை சரியாகப் பிடித்துக் கொள்ளாதது மாதிரி இருந்தது. இவன் இந்த பக்கம் திரும்பிக் கொண்டான்.

"அடுத்தது யாரு?"—இவன் திரும்பவும் கீழே பார்த்தான். அடுத்த சவாரிக்குப் போட்டி நடந்து கொண்டிருந்தது முதலில் சவாரி செய்தவளைப் பார்த்து இவன் கேட்டான்.

"நீ என்னடி பண்ணினே?"

"நான் சைக்கிள் ஓட்டினேனே!"—அது சட்டையைக் கடித்துக் கொண்டே சொல்லிற்று.

"அட! சைக்கிள் ஓட்டினேயா!"

இந்தத் தடவை சைக்கிளிலிருந்து இறங்கியவன் மேலே இருந்த இவன் தம்பியைக் கேட்டான்.

"நீ ஒரு ரவுண்ட் அடிக்கிறியா?"

"வேண்டாம் எனக்குத் தெரியாது".

"பொய் சொல்றே! போன வருஷம் கத்துக்கலே?"

"வேண்டாம்னு விடேன்."

"சைக்கிளைப்பூட்டி சாவியைக்கொண்டா" —உள்ளே பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வாத்தியார் குரல் கொடுத்தார்.

சாவியைக் கொடுத்துவிட்டுப் பெஞ்சியில் உட்கார்ந்தவன் இவனிடம் சொன்னன்.

"எங்க ஊர்லே இன்னும் ஸ்பீடா போவேன்."

"நாலு பேர் பார்க்கிறான்ன உடனே உனக்கு ஒரே குஷி"—தம்பி அவனிடம் சொல்லிவிட்டு உள்ளே போனன்.

சுவற்றுக் கட்டையில் தலையைத் தூக்கலாகக் கழுத்தைப் பதியவைத்துக் கொண்டு பெஞ்சியின் அகல வாட்டில் சாய்ந்தாற் போலப்படுத்துக் கொண்டான். பத்து வயது சிறுமி ஒருத்தி பாப்பாவைத் தூக்கிக்கொண்டு படியேறி வந்தாள். இவனைப் பார்த்துக் கேட்டாள்.

"மாமா, இவளுக்கு உள்ளே யாருகிட்டே யாவது சொல்லிக் கொஞ்சம் பால் கரைச்சு வாங்கிக் கொடுங்களேன்."

"உங்காத்துலேதான் இருந்தாளா? அவளை என்கிட்டே கொடுத்துட்டு நீ போய்க் கேட்டு வாங்கிக்கோ".

குழந்தையை வாங்கிக் கொண்டான் பெண் கதவை லேசாகத் தட்டி நின்றாள். லேசாகத்திறந்த கதவு வழியாக உடம்பை ஒடுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு பெஞ்சியில் உட்கார்ந்தான். அது இவன் தலைமயிரைப் பிடித்து உலுக்கிற்று. மூக்குக் கண்ணாடியைப் பிடுங்கப் பார்த்தது. வேப்ப மரத்தில் காகம் ஒன்று வந்து உட்கார்ந்தது.

"அதோ பார்த்தியா காக்கா."—குழந்தை இவனைப் பார்த்துச் சிரித்து விட்டு இரண்டு கையையும் கொட்டியது. காக்கா பறந்து சென்றது. குழந்தைக்குப் பேச வந்திருந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு அதனோடு பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தான்.

சிறுமி கையில் பால் பாட்டிலுடன் வந்தாள். குழந்தைக்காகக் கையை நீட்டினள்.

"இவளுக்குச் சட்டை போடலியா?" குழந்தையின் மீது ஒட்டியிருந்த புழுதிப் பிசுக்கு இவன் கையில் கசகசத்தது.

"மூத்திரம் பேய்ஞ்சு நனைச்சுண்டுட்டா. ஆத்துலே பனியனைப் போட்டு வச்சுண்டிருக்கோம்." குழந்தையை அவளிடம் கொடுத்தான்.

"மத்த பசங்கள்ளாமும் அங்கே தான் இருக்காளா?"

"அங்கே தான் விளையாடிண்டிருக்கா." அவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு படியிறங்கிப் போனள். பெஞ்சியில் முன் மாதிரி கண்ணைமூடிக் கொண்டு படுத்துக் கொண்டான். உள்ளேயிருந்து மந்திரம் லேசாகக் காதில் விழுந்தது. இவனுக்குப் பெரியப்பா

வின் ஞாபகம் வந்தது. அவர், அநேகமாக அவன் குடும்பம் இருந்த ஒவ்வொரு கிராமத்திற்கும் வந்திருக்கிறார். ஆண்டுக்கு ஒரு தடவை வந்து அவன் குடும்பத்தினரை சந்தோஷப்படுத்திவிட்டுப் போன ஒரே உறவினர் அவர்தான். மதருஸிலிருந்து அவர் வரப் போகிறாரென்றால் வீட்டில் அனைவருக்குமே குதூகலமாக இருக்கும். அவனுக்குப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்து பரீட்சைக்குப் போக வேண்டிய சமயம். உபநயனமும் ஏற்பாடு செய்திருந்தார்கள். முன்னதாகவே வந்திருந்த அவர் அந்தக் கலவரத்தில் அவன் எப்படிப் படிப்பைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று தனியாகக் கூப்பிட்டுச் சொன்னார். பள்ளிக்கூடத்தில் போட்டோவுக்கு நிற்பதற்காக அவருடைய கடிகாரத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு போனான் பள்ளிக்கூடம் போனதும் தன்னுடைய கைக்கு அந்த வாட்ச் மிகப் பெரியதாக இருப்பது போலவும் எல்லாரும் அவனையே விநோதமாகப் பார்ப்பது போலவும் தோன்றியது. அதைக் கழற்றி இன்னொரு பையனிடம் கட்டிக்கச் சொன்னான. பின்னால், போட்டோவின் பிரதி வந்ததும் வீட்டில் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

"அசடு, வாட்சு கட்டிண்டது தெரியாமல் பின்னாடி கையைக் கட்டிண்டு நிக்கறது."

யாரோ படியேறிக் கொண்டிருந்தார்கள். இவன் விரலால் கண்ணை ஒத்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். எதிர் வீட்டுக்காரர் அவர் வீட்டுப் படிக்கட்டு வழியாக வந்து கொண்டிருந்தார். அவர் வீட்டில் சமீபத்தில் ஏதோ ஒரு விசேஷத்திற்காக அழைப்பு கொடுத்திருந்தார், அவன் இங்கு வந்து போகின்ற பரிச்சயத்தில் அம்மா ஏற்கனவே விசாரித்துவிட்டு அவனிடமும் சொல்லியிருந்தாள். சட்டென்று ஞாபகம் வந்தவனாக எழுந்துகொண்டு அவரைப் பார்த்துச் சிரித்து விட்டுக் கேட்டான்.

"விசேஷமெல்லாம் நன்னா நடந்துதா சார்?"

"ஓ எஸ். நீவந்திருக்கலாம். ஆனா அம்மா எல்லாம் சொன்னா. அப்ளிகேஷன கிடைச்சுது. ரொம்பதாங்ஸ்."

"பரவாயில்லே. அதுக்கு என்ன சார்? எதுலே சேர்க்கப் போறேள்?"

"நீ தான் சொல்லணும், அந்த லயன்லே இருக்கே!"

"உங்களுக்கு அவன் ஏதாவது டெக்னிகலா படிக்கணும்னா பர்ஸ்ட் க்ரூப்பிலே சேருங்கோ. இல்லாட்டா, இப்ப ரெண்டு வருஷமா தேர்டு பார்ட்லே பர்ஸ்ட் கிளாஸ் காம்பினேஷன் ஒண்ணு இருக்கு. காமர்ஸ், மாதமாடிக்ஸ், எக்னமிக்ஸ். இது நல்லது பி. காம். போகலாம். கிடைக்காட்டா பி எஸ். ஸி. ஸ்டாடிஸ்டிக்ஸ் படிக்கலாம். எல்லாத்துக்கும் மேலே பையனுக்கு எதுலே இஷ்டம் இருக்குன்னு தெரியணும்."

"அவன் என்னத்தைக் கண்டான்? நாம தான் அவனை ஏதாவது ஒரு லயன்லே விடணும்."

"எங்கே வெளியிலே போயிட்டு வர்றேளா?"

"ஆமாம். கல்யாணம் ஒண்ணு."

"அப்ப நான் வர்ரேன் ரொம்பதாங்ஸ்." அவர் உள்ளே போனார். திரும்பவும் பெஞ்சியில் வந்து உட்கார்ந்தபோது, இப்படி வெளியிலேயே நின்று விசேஷம் விசாரித்தது தவறோ என்ற சந்தேகம் வந்தது.

குழந்தைகள் ஒவ்வொருத்தராகப் படியேறிக் கொண்டிருந்தார்கள்.

"என்னடா, எல்லாருக்கும் பசிக்க ஆரம்பிச்சுட்டுதா?"

"எனக்குத் தண்ணி வேணும்."

"எனக்குந்தான்"—இருவர் முகம் அருவருப்பில் சுளிக்கக் கையைப் பரத்திக் காண்பித்துக் கொண்டு வந்தார்கள்.

"கையிலே என்னடா?"

"ரெண்டு பேரும் முருங்கை மரத்துலே போய் பிசினை அப்பிக் கொண்டு வந்திருக்கான்கள்."—பெரியவன் பதில் சொன்னான்.

"உனக்கு அங்கே என்னடா விளையாட்டு அம்மா, அப்பா விளையாட்டா?"—இவன் அவனைக் கேட்டான்.

"என்ன கலாட்டா பண்றே? நாங்க செஸ் விளையாடினோம்."

கதவு திறந்தது. வாத்தியார் மந்திரத்தை முணு முணுத்துக் கொண்டே வெளியிலே வந்தார். அண்ணனும், அவன் பின்னால் அக்காவும் வந்தார்கள்.

"மாடியிலே காக்காய்க்குப் பிண்டம் போட்டுடலாம்" என்று சொன்ன வாத்தியர் பையன்களைப் பார்த்து,

"இனிமே நீங்க சாப்பிடலாம்டா பசங்களா," என்றார்.

பையன்கள் கதவை நன்றாகத் திறந்து கொண்டு உள்ளே ஓடினார்கள். உள்ளே யாரோ,

"ஓரமாவாங்கோடா, எச்சல்" என்றார்கள்.

அண்ணன் மேலேயே இருந்தான். அக்கா கீழிறங்கி உள்ளே போனாள். வாத்தியார் பெஞ்சியில் வந்து உட்கார்ந்தார்.

"டாண்ணு பன்னெண்டு மணிக்குக் காரியம் முடிஞ்சாச்சு," என்றவர் தொடர்ந்தார்.

"நீ வேற எங்கேயோ போப்பறதா சொன்னுளே. இங்கதான் இருக்கியா?"

"போகலே. எனக்குப் பலவிஷயங்கள்ளேயும் ஒத்துவரலே. வேண்டாம்னு விட்டுட்டேன்."

"ஆமாம்னு, மொதல்லே நமக்கு நெறைய அபிலாஷைகள் எல்லாம் இருக்கும். பளு ஏற ஏற எல்லாம் போறும், இருக்கறதே எதேஷ்டம்னு தோணிப் போயிடறது'—இதற்கு இவன் ஒன்றும் பதில் சொல்ல வில்லே

"உங்காத்துலே இப்ப சிரார்த்தம் ஒண்ணு வருமே, உங்கப்பா பண்றது."

"எனக்குச்சரியாத்தெரியலே, அம்மாவைக் கேட்கணும்."—அவர் விரல்களைப் பிரித்து மடக்கி ஏதோ கணக்கு பண்ண ஆரம்பித்தார்.

"இன்னும் எடுக்கலே!"— அண்ணன் சொல்லிக் கொண்டே இறங்கி வந்தான்.

"நீ அவாளை இலேபோட்டு ரெடி பண்ண சொல்லு. அதுக்குள்ளேயும் காக்கா பிண்டம் எடுத்துடும்."

"காக்கா வந்து கொத்தினதான் சாப்பாடு."

"அப்படிப் பார்த்தா முடியுமா? சாஸ்த்திரத்துலே கூட காக்காய்க்குப் பிண்டம் போடணும்னு தான் சொல்லியிருக்கு. எடுக்கனும்னு சொல்லலே."—அண்ணன் உள்ளே போனுன். வாத்தியார்தான் மேலேஏறிப்போய் இரண்டு முறை சத்தமாகக் காக்காவைக் கூப்பிட்டார். அவர் இறங்கி வந்தபோது உள்ளேயிருந்து மற்ற இருவரும் வந்தனர்.

"நாம போகலாம். சொல்லிட்டு வர்றேன்" வாத்தியார் கிளம்புவதற்கு முன்னல் "எதுக்கும் இன்னும் சித்தப் பாருங்கோ" என்று அண்ணனிடம் சொன்னுர்.

இவன் சாலேயைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான். அக்காவும், அம்மாவும் ஒருவரையடுத்து ஒருவர் மேலேறிப் போய்க் காக்காயைக் கூப்பிட்டுவிட்டு வந்தனர். அவர்கள் மேலே இருக்கும் போது அண்ண்ன் இரண்டு மூன்று தடவைகள் கீழிருந்து குரல் கொடுத்தான்:

"என்ன வந்துதா?".

"வேப்ப மரத்துலே உட்கார்ந்துண்டு இருக்கு. இதைப்பார்க்க மாட்டேங்கிறது."

அவர்கள் முயற்சி பலிக்காதபோது அண்ணன் அக்காவின் பெரிய பிள்ளேயை அனுப்பி 'அது கொத்துகிறவரைக்கும் அங்கேயே இருக்கச் சொன்னுன். சிறிது நேரம் கழித்து, "ஆளேப் பார்த்து அது பயப்படறதோ என்னவோ, ஒருத்தரும் இருக்க வேண்டாம். சித்தநேரம் கழிச்சுப் போய்ப் பார்க்கலாம் என்று யாரோ சொல்ல, அவனும் கீழிறங்கி வந்தான். திரும்பவும், அண்ணன் இரண்டு தடவைகள் அக்கா, அம்மா ஆளுக்கொரு தடவை மேலே போய்," இந்த காக்காய் இன்னிக்கு என்ன இவ்வளவு அழிச்சாட்டியம் பண்ணுகிறது?" என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். அண்ணன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்த மாதிரி "இலேயைப் போடுங்கோ, பார்ப்போம்" என்ருன். இலேயைப் போட்டதும் யாரோ, "பரிமாறலாமா?" என்ருர்கள். அண்ணன் மேலே போய்ப் பார்த்து விட்டுவந்து, "இன்னும் காக்காய் எடுக்கலே போல இருக்கே, என்ன பண்றது?" என்ருன்.

இவனுக்கு உள்ளுக்குள் ஏதோதோன்றிக் கொண்டிருந்தது "நீ போய் காக்காயைக் கூப்பிடு. வந்து கொத்துகிறதா இல்லேயா, பார்."— இவன் அதெல்லாம் ஒன்றுமில்லேயென்று சொல்லி அங்கேயே உட்கார்ந்து இருந்தான். சிறிது பொறுத்து மேலே ஏறிப் போனுன். எல்லாரையும் போலச் சத்தமாகக் காக்காயைக் கூப்பிட அவனுக்கு வெட்கமாக இருந்தது மெதுவாகப் பாட்டை முணுமுணுக்கிற மாதிரி "காகா" காகா" என்ருன். எங்கேயிருந்தோ ஒரு காகம் பறந்து வந்து உருண்டையை நோக்கித் தத்திதத்திவந்தது. மூக்கால் உருண்டையைக் கொத்திற்று. மூக்கில் ஒரு பருக்கை இருந்தது. வெய்யில் பொறுக்க முடியாமல் காலே மாற்றி மாற்றி வைத்து இவன் தரையில் பாதத்தை உராய்ந்த போது காக்காய் இவனேக் கவனித்து விட்டது. அது பறந்து போய் பக்கத்து விட்டுப் புகைக் கூண்டில் உட்கார்ந்தது. இவன ஓடி வந்தான். நிலேப்படி மிகவும் தாழ்ந்ததாக இருந்தது. தலேயில் இடித்துக் கொண்டான். கீழே இறங்காமல், உச்சந்தலேயைத் தேய்த்துக் கொண்டு காற்றில் ஒருககளித்துக் கொண்டிருந்த கதவு மூலேயில் ஒண்டிக் கொண்டான். கைச் சூட்டில் தலேயில் இடித்தது வலி குறைந்து இதம் பெற்றிருந்தது. அங்கே இருந்தபடியே சாத உருண்டையைப் பார்த்தான். காக்காய் திரும்பவும் அதன் அருகில் உட்கார்ந்து அப்படியும், இப்படியுமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தது. உருண்டை இன்னும் பிளக்கவில்லே. காக்காய் திரும்பவும் பறந்து விடாமலிருக்க இவன் சுற்றுப் புறத்தைச் சலனப் படுத்தாமல் கதவு மூலேயில் ஒண்டிக் கொண்டான். சிறிது கழித்ததும் பார்த்தான். உருண்டை பிளந்து இருந்தது. பருக்கைகள் நாலாபக்கமும் சிதறி இருந்தன. காக்காய் கரைந்தது.

இவன் கீழிறங்கி வந்து உள்ளே போய், "காக்காய்பிண்டம்எடுத்துடுத்துசாப்பிடலாம்" என்ருன். அண்ணனும் அவனேத் தொடர்ந்து இரண்டு மூன்று குழந்தைகளும் மேலே போய் பார்த்துவிட்டு வந்தார்கள். அக்காள் சொன்னுள்: "நீ ஏதாவது தப்பு செய்ஞ்சாலும் காமிச்சுக்கமாட்டா. காக்காய் எடுக்கலேனு கஷ்டமாயிருந்தது."

எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

●

இலக்கிய சிருஷ்டி - சில இயல்புகள்

ஆர். சுவாமிநாதன்

உலகின் ஒழுங்கற்ற தன்மையிலிருந்து ஒழுங்கு (order) ஏற்படுத்துவதும் பிரபஞ்ச அமளியிலிருந்து உருவம் உண்டாக்குவதும் தான் படைப்புத்தத்துவத்தின் தன்மைகள். எனவேதான், இலக்கிய கர்த்தா கடவுள் தன்மை பெற்றவன் என்ருர் ஜேம்ஸ் ஜாய்ஸ்.

தன்னுடைய சொந்த வாழ்க்கை அமளியிலிருந்தும், வெளிஉலகின் ஒழுங்கற்ற தன்மையிலிருந்தும், இலக்கிய கர்த்தா தன்படைப்பை சிருஷ்டிக்கிருன். ஆயின், உலகில் ஒழுங்கற்ற தன்மையினூடே ஒழுங்கும் உண்டு, இலக்கிய கர்த்தாவின் சொந்த வாழ்க்கையிலும் ஒழுங்கு உண்டு.

படைக்கப்பட்ட சிருஷ்டி ஏதோ ஒரு விதத்தில் இவ்விரு ஒழுங்குகளையும் மீறியது- உலகின் ஒழுங்கையும் தனிப்பட்ட வாழ்வின் ஒழுங்கையும் மீறி நிற்பது. சிருஷ்டி தன்மய மானது; படைக்கப்பட்ட பிறகு இலக்கிய கர்த்தாவிடமிருந்து தனித்து நிற்பது. ஒழுங் கற்ற தன்மையினூடே ஒழுங்கு ஏற்படுத்துகிற பழைய, முன்பு எப்போதும் இருந்த விஷயங்களினின்றுமாறுபட்டு புதியதாகததோன்றுகிற இவ்விரண்டுமே படைப்புத் தத்துவத்தின் அடிப்படைத் தன்மைகள். திடசித்தமோ (will) பகுத்தறியும் புத்தியோ சிருஷ்டி இயக்கத்திற்கு ஆரம்பதருணத்தில் எவ்விதத்திலும் உதவுவதில்லை.

சிக்மண்ட் ஃப்ராய்ட் சொல்லுவதைப் போல, சிருஷ்டி அதீத கற்பனையிலிருந்தும் பகற் கனவலிருந்தும், கனவு மயக்கத்தினின்றுமே பிறக்கிறது; விளையாட்டுக்குழந்தை தனக்குத் தானே சிருஷ்டித்துக் கொள்ளும் கற்பனை உலகம் போன்றதுதான் இலக்கிய கர்த்தாவின் உலகமும். நிறைவேருத தாபங்கள் அதீத கற்பனைக்குத தூண்டு கோலாக அமைகின்றன; இவ்வகைத் தாபங்கள் பேராசை சம்பந்தப்பட்டவையாகவோ, காமம் சம்பந்தப்பட்டவையாகவோ அல்லது இவ்விரண்டின் கூட்டாகவோ இருத்தல் கூடும்.

அதீதக் கற்பனை என்ற போதிலும், அவற்றிற்கான அடிப்படை, இலக்கிய கர்ததாவின் சொந்த வாழ்க்கை அனுபவத்தின் பாற்பட்டதாகவே இருக்கும். இலக்கிய கர்த்தா சிருஷ்டிக்கும் உலகம் அவன் வசிக்கும் உலகத்தின் சாயல் கூடியதாகவே இருக்கும்.

படைப்பு இயக்கத்திற்கு முக்கியமான காரணமாய் இருப்பது இலக்கிய கர்த்தாவின் சுயதரிசனம்.

சுந்தர ராமசாமி ஒருமுறை சொன்னர். 'நான் என்னைக் காட்டிக் கொள்ளவே எழுதுகிறேன். மௌனி இதைச் செய்து விட்டார். மற்ற நாங்கள் எங்கெங்கேயோ அலைகிருேம்.'

முதலில் அனுபவ உணர்வு, பிறகு அதன் மூலமாக தன்னையும், தன்னுடைய சிருஷ்டி சாத்தியத்தையும் உணர்தல்; இவையே இலக்கிய கர்த்தாவின் கலை உணர்வுக்கு அடிப்படைகள்.

எத்தகைய அனுபவ உணர்வு? அனுபவம் எத்தகைய வரம்புக்கும் உட்பட்டதல்ல; என்றைக்கும் தீர்ந்து விடக்கூடியதும் அல்ல. அது மகத்தான மனேநிலை. மனம் கற்பனை வயப்பட்டது எனின், வாழ்க்கையின் மிக இலேசான குறிப்புக்களைக் கூடக் காணத்தவருது: காற்றின் நுண்ணிய அசைவுகளைக் கூடக் காட்சி வயப்படுத்திவிடும்.

எப்போதும் விழிப்போடு இருப்பதும், அனுபவ பாதிப்பை இழக்காமல் இருப்பதுமே இலக்கிய கர்த்தாவின் குணுதிசயங்கள்.

நேர்கிற அனுபவங்களை முழுவதும் தன்னுடையதாக்கிக் கொள்கிருன் இலக்கிய கர்த்தா.

இதுவரை உணரப்படாதது உணரப்படும் நிலையே சிருஷ்டி நிலை. சிருஷ்டி நிலையின் ஆரம்ப இயக்கம் அடி மனதில் உதிக்கிறது; பிறகு தன்னேட்டமாக நனவிலி மனம் செயல் படத்துவங்குகிறது. அப்பொழுது சிருஷ்டிப் பொருள் இலக்கிய கர்த்தாவின் தன்னுணர்விலிருந்து விடுபட்டு முழுமை பெறுகிறது: தனித்தன்மை பெறுகிறது. (subjective becomes objective).

இங்குதான் சிக்மண்ட் ஃப்ராய்ட் சொன்ன பகற்கனவு, கனவு மயக்கம்போக இன்னொரு விஷயமும் செயல்படுகிறது. கார்ல் குஸ்தாவ்

யுங் சொன்ன அச்சமும், பீதியும். சிருஷ்டி மனதில் நிறைவேருத தாபங்களுக்குச் சமமாக அடக்க முடியாத அச்சமும் செயல்படுகிறது.

தாபமும், அச்சமும் எல்லா சிருஷ்டி மனங்களிலும் ஏதோ ஒரு விகிதத்தில் செயல்பட்டே தீருகின்றன. தாபங்கள் அதிகம் கொண்ட சிருஷ்டி மனம் மனோதத்துவ, சமூக manneristic படைப்புக்களை சிருஷ்டிக்கிறது; அச்சங்கள் நிரம்பிய சிருஷ்டி மனம், தொலை நோக்கு (apocalyptic) படைப்புக்களை உருவாக்குகிறது.

மனோதத்துவ சிருஷ்டி, சமநிலை பிரக்ஞையுடன் செயல்பட்டு வாழ்வின் மேலோட்டத்திலிருந்து அனுபவத்தை எடுத்துக் கொளகிறது.

தொலைநோக்கு சிருஷ்டியோ, மனித மனதின் அடி ஆழங்களைத் துருவுகிறது; எப்பொழுதும் மேன் நிலை பிரக்ஞையுடன் செயல்படுகிறது; அன்னியமான, விசித்திரமான உலகங்களை உருவாக்குகிறது. அர்த்தமற்ற, அசுரத்தனமான நிகழ்ச்சிகளில் நமமை மூழ்கடிக்கிறது.

குஸ்தாவ் யுங் மனோதத்துவ சிருஷ்டியையும் தொலைநோக்கு சிருஷ்டியையும் இரு துருவங்கள் போல் சித்தரிக்கிருர். ஆயின், உண்மையில் அவற்றின் வேறுபாடு அவ்வளவு அகன்றதல்ல; ஒரே சிருஷ்டி இரு மனோநிலைகளையும் உள்ளடக்கி இருக்ககூடும்; வெவ்வேறு சிருஷ்டிகளிடையே விகிதாசாரம் மாறுபடும்.

மனோதத்துவ சிருஷ்டியில் பகுத்துஅலசும் மனித மூளை பெருமளவு இடம் பெறுகிறது; அன்னியமான, விசிததிரமான உலகங்களை உருவாக்கும் இன்னொரு வகை சிருஷ்டியிலோ பகுத்தறிவுக்கு உட்படாத மனவிகாரங்கள் (irrational) தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

யுங் மேலும் சொல்கிருர் "பகல் நேரத்தில் மனிதன் ஒழுங்கான நியதிக்கு உட்பட்ட பிரபஞ்சத்தில் நம்பிக்கை உள்ளவன்; இரவில் அவன் மனதில் ஏற்படும் குழப்பம் பற்றிய பயத்தைச் சமநிலைப்படுத்த இந்த நம்பிகைை உதவுகிறது"

தொலைநோக்கு சிருஷ்டி குழப்பத்திற்கு, நம்முடைய அச்சத்திற்கு உருவம் கொடுக்கிறது; மனோதத்துவ சிருஷ்டியோ தார்மீக, சமூக, மனோதத்துவ ஒழுங்கை நிலைநாட்டுகிறது.

இவ்விருவகை இயல்புகளும் எல்லா சிருஷ்டிகளிலும் சரிசமமாகவோ, அன்றி மாறுபட்ட அளவுகளிலோ விரவிக்கிடக்கின்றன. ஒன்றை ஒன்று ஈடுசெய்கின்றன.

'கலைஞன் தன் சமகாலத்தவர்களை விட நாகரீகமானவன் (civilised); அதே நேரத்தில் அவன் காட்டு மிராண்டிகூட (primitive) என்கிருர் டி. எஸ். எலியட்.

மௌனி, லா. ச. ரா. சார்வாகன். ந. முத்துசாமி இவர்கள் படைப்புக்களில் தொலை நோக்கு இயல்புகள் அதிகம் விரவியிருக்கின்றன. பிச்சமூர்த்தி. தி. ஜானகிராமன், அசோகமித்திரன். நகுலன் இவர்கள் படைப்புகளில் மனோதத்துவ இயல்புகள் மிகுதியான இடம் பெறுகின்றன. இவ்விரண்டாவது வகை எழுத்துகளிலும் தொலைநோக்கு இயல்பு காட்டும்—கண்ணுக்குப் புலப்படாத ஒரு ரகசிய உலகத்திற்காக, ஏங்கும் இரவின் குழப்பத்தில் ஆழ்ந்து தவிக்கும், பண்புகள் இருக்கத்தான் செய்கின்றன.

'The Poet is at the disposal of his night' என்கிருர் ழான் கொக்டு. ●

தொழிற் கற்பு

எட்டு வயதில் திருட்டு ரயிலேறி
பம்பாய் வந்து ஃபௌன்டன் அருகே
காலணிப் பூச்சுத் தொழில் மேற்கொண்டு
பார்த்த கால்களில் தெரிந்தது பம்பாய்—
அழுக்குச் செருப்புத் தொழிலாளர்கள்
ஹைஹீல் ஷூ தமிழ் பெண்பிள்ளைகள்,
என் தொழில் விரோதிகள்.

நெட்டை குட்டை நாரை தடிமன்
கால் மேல்போக, பாதம் மட்டும்
பார்த்துப் பார்த்துக் கட்டடம் கூட
மானிடக் கால்போல், பாலீஷ் போடத்
தோன்றும்.

ஆனுல் எத்தனைப் பெண்கள்
போயினும், ஸ்கர்ட்டின நீளம் குறையினும்
பாதம் தவிரப் பார்த்திடும் ஆவலைத்
தூண்டுவதில்லை. முகங்கள் எனக்கு
மறந்து போகும்; கால்கள் அல்ல.

—தீபப்ரகாசன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றும் துரைராஜ் மீது காஞ்சனு காதல் கொள்கிருள். அவனும அப்படியே. அவள் அண்ணன் இவர்கள் திருமணத்தை எதிர்க்கிருன். காஞ்சனு அத்தையை, மனம் மாற்றி, கல்யாணம் முடித்துக் கொள்கிருள்.

இந்த அத்தையின் பார்வையில்தான் கதை சொல்லப்படுகிறது. தான் நேரில் காண முடியாததை—காதால் கேட்க முடியாத பேச்சை—ஒன்று விடாமல் சொல்கிருள். ஆசிரியருக்கு, வாசகர் மனத்தைக் கவர்ந்து, சோக நிகழ்ச்சியில் மனத்தை அமிழ வைப்பதிலேயே முழுககவனமும் சென்றுவிட்டபடியால் அத்தையின் பார்வையில் இது சாத்தியமா என்ற பிரக்ஞையே வராமல் போய்விட்டது.

காஞ்சனுவின் ஆடம்பரச் செலவுகளால் கதை விரிந்து பரவுகறது. மிதமிஞ்சிய கற்பனை. அறிவுக்குச் சிறிதும் இடம் கொடுக்காத கற்பனை. இம்மாதிரிப்பெண்ணை வாழ்க்கையின் எந்த மூலையிலும் காணமுடியாது. பி. எஸ். ராமையா போன்றவர்களின கதைகளில் தவிர.

ஒரு காட்சி.

'சபாவுக்கு சந்தாகட்டி நாடகம், கச்சேரிக்கு டிக்கட்டு வந்திருககிற அன்னிக்கு அவ திடீர்னு, "இன்னிக்கு நம்ப சினிமாவுக்குப் போகலாம்" பா.

'அவன், "இன்னிக்கு இந்த டிக்கட்டு இருக்கே இன்னெரு நாள் போகலாம்"னு முகம் சிணுங்குவாள்.

'அவனை மெம்பராக நாலு சபாக்களிலே சேர வச்சா.'

பி. எஸ். ராமையா கதைகள், யோசிக்க வைப்பதோ—வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிப்பதோ அல்ல—வாழ்க்கையை இன்னும் அருகில் கொண்டு வந்து காட்டுவதோ அலல. மாருக சுவாரசியம் பரபரப்பு என்னும் விஷயங்களின் மீது ஆதாரப்பட்டு இருப்பவை.

மதுரையில் துரைராஜ் அடமானம் இருக்கும் தனது வீட்டை மீட்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கொடுத்த பணத்திற்கு காஞ்சனு, ஃபிரிஜ் வாங்கிக் கொண்டு வந்து விடுகிருள் தவணைக் கடையிலிருந்து.

துரைராஜ் கோபித்துக் கொண்டு திட்டுகிருன்.

காஞ்சனு தன்னை மறந்து, 'உங்களுக்குக் கஞ்ச புத்தின்னுதான் நெனைச்சிருந்தேன். பணத்தைக் கண்ணுலேயே பாத்திருக்காத தரித்திர புத்தியும் இருக்குங்கறது இப்பத்தான் தெரியுதுன்'னு பதில் சொல்லிட்டா.

துரைராஜ் அவளைப்பிடித்து அறைந்தான்.

காஞ்சனு சோபாவில் சுருண்டு கிடந்தா. துரைராஜ் உடையை மாத்திக்கிட்டு வெளியே போகப் புறப்பட்டான். அவளைப் பார்த்தவுடனே அவன் மனது நோகத் தொடங்கிட்டுது. அவ பக்கத்துல போய், "காஞ்சீ,"ன்னு கூப்பிட்டுத் தொட்டான்.

அவ அவன் கையை அப்பாலே தள்ளி, "என்னைத் தொடவேண்டாம்"ன்னு.

'வேளைக்குத் தகுந்தாப்போலே வாக்குலே வார்த்தையும் வருது! அவன், "இப்பமட்டும் தொடவேண்டாமா? இனி எப்போதுமே தொடக்கூடாதா"ன்னு கேட்டான்.

அவ பதிலே சொல்லல்லே. அவன், "உனக்கு இவ்வளவு நெஞ்சுஉரம்இருக்குன்னு எனக்கு அதுக்கு மேலேபத்துமடங்கு இருக்கு. நானு வந்து உன்னைத் தொடமாட்டேன்"னு சொல்லிட்டுக் கீழே இறங்கிப்போனுன்.

அந்தக் கோபத்தோடே ஸ்கூட்டரை எடுத்தான். வேகம் என்ருல் அப்படி வேகம். ஸ்கூட்டர் பறக்குது, எதிரே லாரி. இரண்டும் மோத அவன் போய்விட்டான்.

'அதே நாற்காலியிலே பிரமையடிச்சு உக்காந்திருக்கா; "அவ வாய்விட்டு அழுதாப் போதும். மனது வேலை செய்யத்தொடங்கிடும். எப்படியாவது அழவச்சுடுங்க"ன்னு டாக்டர் சொன்னுர்.

அவளைப் பார்த்தா என் வயத்துக்குள்ளே குபீருன்னு தீ பத்தி எரியுது. நெஞ்சை அடைக்குது. நான் அவளை இழுத்துக் கட்டிக்கிட்டுக் கதர்றேன். ஆனு அவ அழவே மாட்டேங்கரு. திரும்பத் திரும்ப 'இனி எப்பவுமே என்னைத் தொடவேண்டாம்னு நான் சொல்லல்லே அத்தேங்கரு'

கதை முடிந்து விட்டது.

சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னல் பி எஸ். ராமையா எழுதிய கதைகளை மணிககொடி பிரசுரித்தது; இன்றைக்குக் குமுதம் பிரசுரித்துப் பெருமை அடைந்துவிடுகிறது. ஆனல், ராமையாவோ ஒரேமாதிரியான கதையையே எழுதிக் கொண்டு வருகிருர்.

தமிழ்ச் சிறுகதைச் சரித்திரம் இலக்கிய பூர்வமாக எழுதப் படுகையில கல்கியின் பெயர் விடுபட்டுப் போவது போலவே பி. எஸ். ராமையாவின் பேரும் விடுபட்டுப் போகலாம் என்றே எனக்குப் படுகிறது. ●

கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள்*

எந்தப் பெரிய தலையின் அணிந்துரையும் இல்லாமல் 'மீரா'வின் கவிதைத்தொகுப்பு ஒரு முடிவுரையை ஆரம்பமாய்க் கொண்டு வெளிவந்துள்ளது.

72 கவிதைகள் அடங்கிய இத் தொகுதியில் ஆசிரியர் வாசகனைப் பற்றியே கவலைப் படாமல் 'அவளோடு' சேர்ந்து, அழுது, சிரித்து, புலம்பி ஒரு உமர்கய்யாமின் உருகலாய் வெளிப்படுகிறார்.

'கடற்கரையில் பார்த்தேன் கன்னியவளை' என்றோ, 'பள்ளத்தாக்கில் பார்த்த பறைச்சியவளைப் பற்றிய பாட்டு இது!' என்றோ கவிதைகளுக்கு முன்னால் முன்னுரை எரிச்சல்கள் இல்லை.

"என் மூதாதை ஒருவன்
பரா சக்தியிடம் வரம் கேட்டான்.
காணி நிலம்,
மாட மாளிகை,
தென்னந் தோப்பு
அது இது என்று வேண்டி
இறுதியில்
ஒரு பத்தினிப் பெண்ணைக் கேட்டான்
நான் கேட்டால்
உன்னை மட்டும்தான் கேட்பேன்.
உன்னைப் பெற்றால்
உலகத்தில் உள்ள
எல்லாம் பெற்ற மாதிரிதானே!"

மீராவின் இந்தக் 'குட்டல்' இதமாய் இருக்கிறது. ஆனால் இவர் எதையுமே கவிதை பண்ணியதாய்த் தெரியவில்லை. இவரிடம் உள்ள கவித்வம் நமக்குத் தெரிகிறது. சில புதிய பார்வைகளைத் தரிசிக்க முடிகிறது. கவிதை உரை நடையிலிருந்து மாறுபட்டு நிற்க வேண்டாமா என்று மீராவிடம் கேட்டால முதல் பக்கத்தைப் பார்க்கச் சொல்லி விடுவார். அங்கு எழுதியிருக்கிறார்—

கவிதைகள் அல்ல,
ஆக்கிக் கொள்ளலாம்.

ஓர் உதாரணம்:-

'சமீபத்தில் உதக மண்டலம் போயிருந்தேன். நீலகிரியின் மாயக் கவர்ச்சியில் மயங்கிய நான் மலர்க் கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கே இலையுதிர் காலத்தில் மலரும் விதவிதமான பூக்களை வைத்திருந்தார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின மலர்ந்த குறிஞ்சிப் பூக்களும் இருந்தன. அவற்றைப் பார்த்துச் சிலர் அதிசயித்தார்கள். நானோ, பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மலர்ந்துள்ள உன்னை அந்தப் பூக்களிடையே வைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினேன்.'

இது ஒரு கவிதை! அழகாக வரிவரியாகப் பிரித்து ஒரு பக்கத்துக்கு வரும்படியாக புத்தகத்தின் நீளத்தை வரிகளின் அகலத்தால் வகுத்திருக்கிறார்.

கவிதைக்கு விஷயம் மட்டும் முக்கியம் இல்லை. சொல்லும் விதமும் முக்கியம். 'நாம் படிப்பது கவிதை' என்று வாசகன் மனதில் உணர வேண்டும். இந்த உணரலை உண்டாக்க 'ரிதம்' அவசியமாகிறது. இதை மீரா உணர வேண்டும்.

சில images அழகாகப் பளிச்சென்று விழுகின்றன:

(i) நான் உன் அருகே வருகிறேன்
உண்ணும் போது
வாய்கு அருகே வரும்
கையைப் போல...

(ii) பல நாட்கள்
உன் பின்னால் தொடர்ந்துவருகிறேன்
பண்ணையாருக்குப் பின்னால் வரும்
கூலிக் காரனைப் போல.
எனினும்,
நீ உன் வீட்டுக்குள் நுழையும்போது
என்னால் பின தொடர முடியவில்லை
கூடவர முடியவில்லை
வாசலில் நின்றவாறு
உன் வீட்டையே பார்க்கிறேன்,
எல்லையில் நின்றவாறு
நாடு கடத்தப்பட்ட ஒரு தேசாபிமானி
தன் நாட்டை ஏக்கத்தோடு
பார்ப்பதைப் போல.

தன் வீட்டு முற்றத்தில் இயற்கையாகப் பெய்யும் மழையைக் கூட, 'இது அவள் வீட்டு முற்றத்திலும் பெய்யும் மழை' என நினைத்துச் சந்தோஷப்படுவது ஆறுதலாய் இருக்கிறது.

நடுநடுவே பண்டித பாணியில் சில cliches தென்படுகின்றன. ஒரு கவிதை:

நீ சிரிக்காதே
சிரித்தால்
உன் புன்னகையை
மணிகள் என்று
விற்றுவிடச் சிலர்
காத்திருக்கிறார்கள்!

---

* (கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்
ஆசிரியர்: மீரா, விலை. ரூ. 2/-
வ்ற்பனை உரிமை: மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை)

காதலன் காதலியைப் பார்த்து வியப்பதை
"புரட்சியில் மலர்த்த சோவியத் பூமியின்
கூட்டுப் பண்ணைகளைப்
படங்களில் பார்த்து மலைக்கும்
ஒரு இந்திய உழவனைப் போல்
வியப்படைகிறேன்"

—என்றும்

காதலியின் தோழியிடம் (?)
நான் ஏங்கல்ஸின் மாணவன்
இதுவரை ஏழைதான்.
இனிமேல் தான் பணக்காரனாக ஆக
வேண்டும்

—என்றும் தனக்குத் தெரிந்த, அல்லது தான் சொல்ல விரும்பிய இவரது கம்யூனிஸ வரிகள் கவிதைகளிடையே கண்ணை உறுத்துகின்றன. இது மாதிரி உவமைகள், இவர் அதிகமாகக் காதலிப்பது கம்யூனிஸத்தையா அல்லது அவளையா என்ற மயக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நினைவுகளில் லயித்துப் போய், தன் மனசின் அரிப்பைச் சொரிந்து கொள்ள அவ்வப்போது டயரியில் பதித்து வைத்தவைகளையெல்லாம் இவர் அச்சில் கொண்டு வந்திருக்கிறார். இவைகளில் சில அற்புதமானவைதான். கவிதா வீச்சு உள்ளவைதான் ஆனால் இவற்றை இவர் கவிதையாகப் பண்ண ஒரு ஆரம்ப முயற்சி கூட எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லையே!

மீரா ஒரு கவிஞர். ஆனால் கவிதைகளே எழுதவில்லை.

சுப்ரமண்ய-ராஜு

என் எழுத்து......

"நாவல் இலக்கியத்தில் ஒரு சிகரத்தைத் தொட்ட நீலபத்மனாபன், சிறுகதை என்று வரும்போது மாத்திரம் ஏமாற்றி விடுகிறார் பெரும்பாலும்" என்ற என் கருத்து (கணையாழி; ஜூன 1971), நீலபத்மனாபன் கொடுத்துள்ள மேற்கோளில் "நாவல் இலக்கியத்தில் எவரெஸ்டைத் தொட்டுவிட்ட நீலபத்மனாபன் சிறுகதைகளில் அதல பாதாளத்தில் விழுந்து விட்டார்" என்று மாறியிருக்கிறது. மாற்ற வேண்டிய அவசியம் நீலபத்மனாபனுக்கு இருந்திருக்கிறது.

இதற்கு முந்திய பாராவில் ந. முத்துசாமியின் கருத்துக்களை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை, மாற்றாமல், மேற்கோள் காட்ட முடிந்த நீலபத்மனாபனின் பேனா, அடுத்த பாராவில் இப்படிப் பிசகமுடியுமானால், நாவல், சிறுகதை இவற்றில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்க முடிந்ததில் ஆச்சரியமல்ல. நீலபத்மனாபன் தன் மற்ற அலுவலகளுக்கும், தலைமுறைகள் எழுதிய பேனாவையே உபயோகிப்பதால், தான் விடுமுறை கோரி எழுதும் கடிதமும், தலைமுறைகள் நாவலும், எவரெஸ்ட் சிகரத்தில் அடுத்தடுத்து உட்கார்ந்திருப்பதாக வாதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் அவருடைய சிறுகதைகளைப் பற்றிய என் கருத்துக்களுக்குக் காரணம்காட்டவில்லை என்கிறார். "மோகம் முப்பதாண்டு" பற்றி நான் அவருக்கு எழுதியபோது அவர் அளித்த பதில் (7—10—70) இதோ :

"நாவலுக்கென்று, சிறுகதைக்கென்று தனித்தனியே என்னிடம்பேனா எதுவும் இல்லை. இருப்பினும் தாங்கள் குறிப்பிட்டிருந்ததவாறு இலக்கிய உலகில் என் சிறுகதைகள் பலருக்குத் திருப்தி அளிக்காமலிருப்பது எனக்கும் தெரியும். ஆனால் உண்மையைச் சொல்வதால் ஒரு நாவல் எழுதுவதைவிட எவ்வளவோ கவனமாகவும், எச்சரிக்கையாகவும்தான், என்னுடைய ஒவ்வொரு கதையையும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.....உம்...எல்லோருக்கும் சில லிமிடேஷன்ஸ் உண்டு அல்லவா?..."

இதற்குமேல் நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. "நாவலாகட்டும், சிறுகதையாகட்டும், கவிதையாகட்டும், லீவ் லெட்டராகட்டும், எதைத் தொட்டாலும் நீர் மன்னன்யா!" என்று சொன்னால் ஒழிய இந்த தலைமுறை எழுத்தாளர்களில் பலருக்கு திருப்தியே ஏற்படுவதில்லை. இப்படி புகழுரைகளை அவர்கள் பாட்டி சொல்லலாம். நாம் சொல்ல முடியுமோ?

-வெ. சாமிநாதன்

ஒரு புத்தகத்திற்குக் கொஞ்சம் அறிவுபூர்வமாக மதிப்புரை எழுதினால் தமிழ் எழுத்தாளர்கள் பலரால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. விமர்சகர் மீது சீறிப்பாய்கிறார்கள். "ரெடிமேடு விமர்சகர்களுக்கு இலக்கியமபற்றி, என் தவம் பற்றி—என் சோதனை பற்றி, வாசகர்களிடையே எனக்கு இருக்கும் செல்வாக்கு பற்றி என்ன தெரியும்"? என்று ஆரம்பித்து விடுகிறார்கள். "உங்களுடைய சிமிழக்குள்ளே போட்டு என்னை அடைக்காதீர்கள். உங்கள் கஜக்கோல், மட்டப்பலகை வைத்துக் கொண்டு என்னை அளக்காதீர்கள்" என்று அறிவுரை வழங்குகிறார்கள்.

ஒரு பிரபல எழுத்தாளர் இருக்கிறார். அவரை இலக்கிய பூர்வமாக யாராவது விமர்சித்தால்—அதற்குப் பதில் சொல்வதுமாதிரி ஒரு கட்டுரை எழுதி தன்னுடைய நாவலுக்கோ—சிறுகதைத் தொகுப்புக்கோ அதை முன்னுரையாகச் செருகிவிடுவார். இன்னும் சில எழுத்தாளர்கள் மேடை கிடைத்தால் நிறைய பேசி தீர்ப்பார்கள். விமர்சனம் என்றால் பாராட்டுரை என்பது இவர்களின் அபிப்பிராயம். இந்த வரிசையில் நீலபத்மநாபன் வந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தையே

கொடுத்தது. அவர் தொட்டால் சிணுங்கி இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நினைப்பு தவறு என்ற ரீதியில் 'என் எழுத்தில்' எழுதி இருக்கிருர்.

தன் எழுத்தைப்பற்றி தவருன அபிப்பிராயம் சொல்லப் படுகையில்—அதை யாரும திருத்த முன் வராது போகையில் திருத்துவது தன் வேலை என்கிருர். இலக்கியத்தில் தவறு என்பதும், சரி என்பதும் என்ன? இலக்கியம் கணக்கு அல்ல. யார் கூட்டினுலும் நாலும் நாலும் எட்டு என்பதற்கு.

படைப்பாளி கனவிலும் நினைக்காத ஒரு கருத்தை, சித்திரத்தை ஒரு கதை தரலாம். ஒரு விமர்சகன் தானே கூட காணலாம். இப்படிப் பல பார்வைகளுக்கு இடம் கொடுப்பது தான் இலக்கியம்.

என் எழுத்தில் பல பார்வைகளுக்கு இடமில்லை, நான் சோதனை செய்து குதிரையை விடுகிறேன். தெற்காக வந்து தென்மேற்காகத் திரும்பி மேற்காக இரண்டடி நடந்து வடமேற்கில் நின்று கண்களை ஒடுக்கிக் கொண்டு பார். என்சோதனைக் குதிரை ஓடுவதுதெரியும் என்றுபடைப்பாளிசொல்வது ஆச்சரியத்தையே தருகிறது. படைப்பதுதான் அவன் வேலை. படைப்பை இப்படித்தான் பார்த்து இன்னின்னைதக்கண்டு அபிப்பிராயம் சொல்லவேண்டும் என்று சொல்வது அவன் வேலை அல்ல. இது இலக்கியத்தின் அரிச்சுவடி.

தங்கள் படைப்பு பற்றித் தவருக விமர்சிக்கப் படுகிறது என்று நினைக்கும் நீலபத்மநாபன் போன்ற எழுத்தாளர்கள் படைப்போடு ஒரு வியாக்கியானத்தையும் எழுதிச் சேர்த்துப் பதிப்பித்துவிட்டால், தவருன விமர்சனம் வராமல் இருக்கும். வியாக்கியானமே தவருக இருக்கிறது என்ற அபிப்பிராயம் வந்தால் வியாக்கியானம் நம்பர் இரண்டு எழுத வேண்டியதுதான்.

சா. கந்தசாமி

அக்கம் பக்கம்

"ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்" என்ற தலைப்பில் இடைக்காலம முதல் தற்காலம வரையிலுள்ள ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்பான பகுதிகளை மொழி பெயர்த்துத் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், ஹொர்ஸ்ட் எர்த்மன ஃபெர்லாக்கின் ஆதரவோடு வெளியிட்டுள்ளது. மொழி பெயர்ப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எல்லாம் சிறப்பானதாக இருந்தாலும் தமிழ் மொழி பெயர்ப்பின் கொடுமையைத்தான் தாங்கிக் கொள்ள முடியவில்லை. காலத்தை ஒட்டிய மொழி பெயர்ப்புக்கு பதிலாக, கடனுக்குச் செய்தவையாகவும், உயிரற்றவைகளாகவும் இருப்பது தான் நமது துரதிர்ஷ்டம்.

தாமஸ் மன் இந்நூற்ருண்டு இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க ஒருவர். அவர் எழுத்துக்களின் சிறப்பு ஆங்கில மொழிபெயர்ப்புக்களின் மூலம் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும். அவரது 'வெனீஸில் மரணம்' என்ற குறுநாவலை கா. திரவியம், ஐ. ஏ. எஸ்., மொழி பெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பை நீங்களும் புரிந்துக் கொள்ள ஒரு பகுதியைத் தருகிறேன்.

"எல்லாக் காதலரையும் போலவே, அவனும் தன் அன்புக்குரியவனை மகிழ்விக்க விரும்பினன். வெற்றி கிட்டாதோ என்று அஞ்சி வேதனையில் துடித்தான். மிடுக்கான 'டை', கைக்குட்டைகள் போன்றவற்ருலும், இளமைக்குரிய மற்ற அலங்காரங்களாலும், தன் ஆடையை அழகுபடுத்திக் கொண்டான். வாசனைத்திரவியங்கள் பூசி, அணிகள் பூண்டு ஒவ்வொரு நாளும் ஆடையலங்காரத்தில் பல மணி நேரம் செலவு செய்தான். பகட்டாக உடையுடுத்திப் பதட்டமான துடிப்புடன், இரவு உணவு அருந்த வருவான். தன் மனத்தைக் கவர்ந்திருந்த இளமையழகிற்கு எதிரே, தன் வயதான உடம்புபற்றி எண்ணியபோது, அவனுக்கே அருவருப்பு ஏற்பட்டது. தன் நரை முடியையும் வற்றிய உடலையும் கண்டு அவனுக்குத் தாங்கொணு வேதனை ஏற்பட்டது. இளமையின் தோற்றத்தையும் பசுமையையும் பெற, அசட்டுத் துணிச்சலான முயற்சிகள் பல செய்தான். ஹோட்டல் நாவிதனிடம் அடிக்கடி சென்று வந்தான்."

∴ ∴ ∴

இலக்கியச் சிந்தனையின் டிசம்பர் மாதக் கூட்டத்தில ஔவை து. நடராஜன் 'சிந்தனைகள் சில' என்பது பற்றி தலைமை வகித்துப் பேசினுர். நவம்பர் மாதத்தியச் சிறுகதைகளை சிதம்பர ரகுநாதன் மதிப்பீடு செய்து சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுத்தார். முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவன் தான் என்று அன்று முதல் இன்றுவரை சொல்லிக் கொண்டிருக்கும் ரகுநாதனுக்குச் சிறுகதைகளில் கதையர்சம்தான் முக்கியம். அதனுல் தான் 'கலைமகளில்' வந்த இரண்டு கதைகளைச் சிறப்பித்துக் கூறிவிட்டு, சுகி சுப்ரமணியத்தின் 'நேர்மை' யென்ற கதையைச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்க முடிந்தது ஆசார கம்யூனிஸ்டான ரகுநாதனுல்.

∴ ∴ ∴

சென்ற இதழின் அட்டைப்பட ஓவியத்தை வரைந்தவர் திரு ஆர் வரதராஜன்.

—நா கிருஷ்ணமூர்த்தி

Published by N Mahaganapathy 47. Nallathambi Mudali Street, Madras-5 Printed by M. K. Swamy at Prem Press, 8, M. K. Amman Koil St., Madras-4. Edited by N. Krishnamoorthy No. 1, Devadi Street, Madras-4.